**ஜனவரி – 25**

# TNPSC துளிகள்

- நடக்கும் கடவுள் அல்லது நடீடாடுவா தேவரு என்று பிரபலமாக அறியப்படும் 111 வயதான, சித்தகங்கா மடத்தின் தலைவரான, ஒரு புகழ்பெற்ற லிங்காயத்தவரான சிவக்குமார சுவாமி கர்நாடகாவின் தும்கூருவில் உள்ள மடத்தில் ஜனவரி 21-ம் தேதியன்று காலமானார்.
- 2019 ஆம் ஆண்டு ஜனவரி 24-ம் தேதியன்று லக்னோவில் "UP DIWAS" என்ற பெயரில் உத்தரப் பிரதேசம் தனது 69-வது நிறுவன தினத்தைக் கொண்டாடியது. முன்னதாக ஒன்றுபட்ட மாகாணம் என்று அறியப்பட்டு, பின்பு 1950 ஆம் ஆண்டு ஜனவரி 24-ம் தேதியன்று உத்தரப் பிரதேசம் என்ற அதன் பெயரை அம்மாநிலம் பெற்றது.
- ஆந்திரப் பிரதேசத்தின் கர்னூலில் உள்ள ஒரு வியாபாரிக்கும் தெலுங்கானாவின் கத்வால் சந்தையில் இருக்கும் ஒரு விவசாயிக்கும் இடையே 8.46 குவிண்டால் நிலக்கடலை மீதான வர்த்தகமானது ஜனவரி 19 அன்று முதல்முறையாக மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகமாக மின்னணு தேசிய விவசாயச் சந்தை (electronic National Agriculture Market/eNAM) மூலம் ஆரம்பிக்கப்பட்டது.
- இந்தியப் போட்டி ஆணையம் (Competition Commission of India) டென் நெட்வொர்க்ஸ், ஹாத்வே மற்றும் டாடாகாம் ஆகிய நிறுவனங்களைக் கையகப்படுத்திட ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு ஒப்புதலை அளித்திருக்கின்றது.
    - ரிலையன்ஸ் நிறுவனம் டென் நிறுவனத்தில் 66 சதவிகிதத்தையும், ஹாத்வே நிறுவனத்தில் 51.3 சதவிகிதத்தையும் கையகப்படுத்தியது.
- இந்தியக் குடியரசுத் தலைவர் பியூஸ் கோயலை இடைக்கால நிதியமைச்சராகவும் பெருநிறுவன அமைச்சராகவும் நியமித்தார். இதற்கான காரணம் அருண் ஜெட்லி உடல் நலம் தொடர்பான விவகாரங்கள் ஆகும். பியூஸ் கோயலின் இடைக்கால நிதி மந்திரிக்கான பதவிக் காலம் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வரை தொடரும்.
    - பியூஸ் கோயலுக்கு நிதியமைச்சகப் பொறுப்பு அளிக்கப்பட்டிருப்பது இது இரண்டாவது முறையாகும்.
- சமீபத்தில் பால் காமா தீயிபாவும் அவரது அமைச்சரவையும் ராஜினாமா செய்த காரணத்திற்காக மேற்கு ஆப்பிரிக்க நாடான பர்கினா பசோவின் குடியரசுத் தலைவர் கிறிஸ்டோபி ஜோல்மேரி டாபிரி என்பவரை புதிய பிரதமராக நியமித்திருக்கின்றார்.
- கேரள எழுத்தறிவுத் திட்டத்தின் அக்சர லட்சம் (மில்லியன் எழுத்துக்கள்) எழுத்தறிவுத் தேர்வில் முதலிடம் பிடித்த கேரளாவைச் சேர்ந்த 96 வயதான கார்த்தாயாயினி அம்மா சமீபத்தில் காமன்வெல்த்தின் கற்பதற்கான நல்லெண்ணத் தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.
    - காமன் வெல்த்தின் கற்பதற்கான திட்டம் தனது உறுப்பு நாடுகளில் தொலைத் தூரக் கல்வியை மேம்படுத்திட திட்டமிட்டிருக்கின்றது.
- கர்நாடகாவைச் சேர்ந்த இந்திய காவல்துறை அதிகாரி மற்றும் இந்தோ திபெத்திய எல்லைக் காவல் படை அதிகாரி அபர்ணா குமார் உலகின் கடைக்கோடி தென் பகுதியான அண்டார்டிகாவில் அமைந்துள்ள தென் துருவத்தை வெற்றிகரமாக அடைந்த முதல் பெண்மணியாக சாதனை படைத்திருக்கின்றார்.
    - தென் துருவம் என்பது உலகின் மிகவும் குளிரான மற்றும் மிகவும் வறண்ட பகுதியாகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## அரசுப் பள்ளிகளில் மழலையர் பள்ளி

- தமிழ்நாடு முதல்வர் ஜனவரி 21-ம் தேதியன்று மாநிலத்தில் அங்கன்வாடி மையங்களாக உள்ள அரசு இடைநிலைப் பள்ளிகளில் ஆங்கில வழியில் மாண்டிச்சோரி கல்வி வழியில் அமைந்திருக்கும் மழலையர் கல்வி வகுப்புகளை குழந்தைகள் அணுகிடுவதற்கு ஏதுவாக ஒரு சோதனைத் திட்டத்தைத் துவக்கி வைத்தார்.
- இது தொடர்பாக சென்னை எழும்பூரில் உள்ள பிரசிடென்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் மழலையர் வகுப்புகள் தொடங்கி வைக்கப்பட்டன.
- இது 2381 அங்கன் வாடிகளில் 52000 குழந்தைகளுக்குப் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- இந்த வகுப்புகள் அனைத்து 32 மாவட்டங்களிலும் பள்ளிக் கல்வித்துறை மற்றும் சமூகநலத்துறை ஆகியவற்றால் இணைந்து நடத்தப்படும்.
- இந்த பள்ளிகள் இடைநிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களால் மேலாண்மை செய்யப்படும். மேலும் இப்பள்ளிகள் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் அதிகாரிகளின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும்.
- இதே நோக்கத்திற்காக அதிகப்படியாக உள்ள இடைநிலை வகுப்பு ஆசிரியர்கள் பயன்படுத்தப்படுவர்.
- குழந்தைகளுக்கு கல்வியளிக்க உள்ள ஆசிரியர்கள் சமக்ரா சிக்சா அபியான் என்ற திட்டத்தின் கீழ் பயிற்சியளிக்கப்படுவர்.
- நான்கு பள்ளிச் சீருடைகள், ஒரு ஜோடி காலணி, எழுதுபொருள்கள் மற்றும் பயிற்சி நிறைவுச் சான்றிதழ் ஆகியன மாநில அரசால் வழங்கப்படும்.
- இந்த திட்டம் மாணவர்கள் ஆங்கிலத்தில் எழுதுவது மற்றும் பேசுவது, அவர்களின் கற்கும் திறனை மேம்படுத்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டம் பெற்றோர்கள் அரசுப் பள்ளிகளை நாடுவதற்கு உதவிடும் என்று அரசு தளராத நம்பிக்கை கொண்டிருக்கின்றது.
- இத்திட்டத்திற்காக 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு இருக்கின்றது.
- இது மூன்று வருடங்களுக்கான ஒரு சோதனைத் திட்டமாகும்.

# தேசியச் செய்திகள்

## அந்தமானில் புதிய கடற்படை விமானத் தளம் - INS KOHASSA

- அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் உள்ள டிஜிலிபூரில் INS KOHASSA என்ற புதிய கடற்படை விமானத் தளத்தை கடற்படை தலைமை அட்மிரலான சுனில் லம்பா துவக்கி வைத்தார்.




- இந்த விமானத் தளம் பாதுகாப்புத் துறைக்கும் பயணிகள் விமானப் போக்குவரத்திற்கும் பயன்படுத்தப்படும். மேலும் இது ஒரு தனிப்பட்ட பிரிவாக செயல்படும்.
- அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் உள்ள 3-வது விமான தளமாக, INS KOHASSA மலாக்கா சந்தி வழியாக இந்தியப் பெருங்கடலில் நுழையும் சீனக் கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்காணித்திடுவதற்குப் பயன்படுத்தப்படும்.

## சுபாஷ் சந்திர போஸ் அப்தா பிரபந்தன் புரஸ்கார் விருது

- சுபாஷ் சந்திரபோஸ் அப்தா பிரபந்தன் புரஸ்கார் என்ற வருடாந்திர விருதை அரசு ஏற்படுத்தியிருக்கின்றது.
- இந்த விருது நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பிறந்த தினமான ஜனவரி 23-ம் தேதியன்று ஒவ்வொரு வருடமும் அளிக்கப்படும்.
- இந்த விருது ஒரு சான்றிதழையும் 51 லட்சம் ரூபாய்கள் பரிசுத் தொகையையும் கொண்டதாகும்.
- 2019 ஆம் வருடத்திற்காக காசியாபாத்தில் அமைந்திருக்கும் தேசிய பேரிடர் பதிலளிப்புப் படையின் 8-வது பிரிவு பேரிடர் மேலாண்மையில் தனது சிறந்த பணிகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றது.



## பிரவசி தீர்த்த தர்ஷன் யோஜனா

- பிரதமர் சமீபத்தில் புதுதில்லியில் பிரவசி தீர்த்த தர்சன் யோஜனா என்ற திட்டத்தைத் துவக்கி வைத்திருக்கின்றார்.
- இதன் கீழ் ஒரு வருடத்திற்கு இருமுறை இந்தியாவில் உள்ள சமயம் சார்ந்த பகுதிகளுக்கு அரசு நிதியளிக்கும் சுற்றுலாவாக இந்திய வம்சாவளியினரின் ஒரு பிரிவினர் அழைத்துக் கொள்ளப்படுவர்.
- இதன் தகுதிக்கான விதிகளின் கீழ், 45 முதல் 65 வயதிற்கு இடைப்பட்ட அனைத்து இந்திய வம்சாவளி மக்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும். இதிலிருந்து ஒரு குழுவினர் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- முதன்முறையான முன்னுரிமை விருப்பம், கிரீமித்தியா நாடுகள் என்றழைக்கப்படும் மொரீசியஸ், பிஜி, சுரினாம், கயானா, டிரினிடாட் மற்றும் டொபாகோ மற்றும் ஜமைக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கு அளிக்கப்படும்.

# சர்வதேசச் செய்திகள்

## எடில்மேன் நம்பிக்கை குறியீட்டு அறிக்கை 2019

- எடில்மேன் உளவுப் பிரிவால் 2019 ஆம் ஆண்டின் எடில்மேன் நம்பிக்கை குறியீட்டு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது.
- இது வர்த்தகம், அரசாங்கம், ஊடகம் மற்றும் அரசு சாரா அமைப்புகளில் உள்ள நம்பிக்கைக்கான கோட்பாடுகள் மீது கவனம் செலுத்தும் முக்கியப் பிரமுகர்களின் கருத்துகள் மீது அமைந்திருக்கும் ஒரு சர்வதேச ஆய்வாகும்.
- இந்த கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் அந்த அறிக்கை ஒரு உலகளாவிய நம்பிக்கை குறியீட்டைத் தயாரிக்கின்றது.
- அதில் உள்ள முக்கிய தகவல்கள் பின்வருமாறு
    - அரசாங்கம், வர்த்தகம், அரசு சாரா அமைப்புகள் மற்றும் ஊடகம் என்று வரும் போது இந்தியா உலகளவில் ஒரு மிகுந்த நம்பிக்கையான நாடுகளில் ஒன்றாகும். ஆனால் இந்தியாவின் உற்பத்திகள் குறைவான நம்பிக்கையைப் பெற்றவையாகும்.
    - தகவலளிக்கப்பட்ட பொது மக்கள் பிரிவில் இந்தியா இரண்டாவது இடத்திலும் பொதுவான மக்கள் பிரிவில் மூன்றாவது இடத்திலும் உள்ளது. இவ்விரு பிரிவுகளிலும் சீனா முதலிடத்தில் உள்ளது.
    - சுவிட்சர்லாந்து, ஜெர்மனி மற்றும் கனடாவில் தலைமையகம் அமையப் பெற்ற நிறுவனங்கள் மிகுந்த நம்பிக்கைக்கு உரியவையாகும்.
    - இந்தியா, மெக்சிகோ மற்றும் பிரேசில் ஆகியவற்றில் தலைமையகம் அமையப் பெற்ற நிறுவனங்கள் குறைவான நம்பிக்கையைக் கொண்டவையாகும். இதனைத் தொடர்ந்து சீனா மற்றும் தென் கொரியா ஆகியன உள்ளன.

## உலகளாவிய திறன்களுக்கான போட்டித் தரவரிசை 2019

- சுவிட்சர்லாந்தின் தாவோஸில் 2019 ஆம் ஆண்டில் 49-வது உலகப் பொருளாதார

மன்றத்தின் வருடாந்திரக் கூட்டத்தின் முதல் நாளில் உலகளாவிய திறன்களுக்கான போட்டித் தரவரிசை வெளியிடப்பட்டது.

- இந்த வருடாந்திரத் தரவரிசை டாடா கம்யூனிகேசன்ஸ் மற்றும் அடெக்கோ குரூப் ஆகிய நிறுவனங்களுடன் இன்ஸீட் என்ற வர்த்தகப் பள்ளியால் தயாரிக்கப்படுகின்றது.
- இந்த தரவரிசை எவ்வாறு நாடுகள் தங்கள் திறமைகளை வளர்த்து, ஈர்த்து மற்றும் தக்க வைக்கின்றன என்பதை அளவிடுகின்றது.




- இந்த பட்டியலில் ஒரு படி முன்னேறி 80-வது இடத்தை இந்தியா கைப்பற்றியிருக்கும் போதிலும், பிரிக்ஸ் நாடுகள் மத்தியில் இந்தியா, ஒரு திறன் குறைந்த நாடாக இருக்கின்றது.
- இந்த பட்டியலில் முதல் ஐந்து இடங்களில் சுவிட்சர்லாந்தும் அதனைத் தொடர்ந்து சிங்கப்பூர், அமெரிக்கா, நார்வே மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளும் உள்ளன.
- கடந்த 5 வருடங்களில் திறனுக்கான இடைவெளி அதிக மற்றும் குறைவான வருமானமுடைய நாடுகளிடையே அதிகமாகியிருக்கின்றது.
- சீனாவின் தரவரிசை இரண்டு இடங்கள் சரிந்து 45 ஆக இருந்த போதிலும் பிரிக்ஸ் நாடுகளின் மத்தியில் இது சிறந்த திறமையான நாடாக இருக்கின்றது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலக சுகாதார நிறுவனத்தின் 10 உலகளாவிய சுகாதார அபாயங்கள்

- 2019 ஆம் ஆண்டில் உலக சுகாதார நிறுவனத்திடமிருந்தும் அதன் சுகாதார பங்குதாரர்களிடமிருந்தும் உடனடியாக கவனத்தை ஈர்க்கும் 10 உலகளாவிய சுகாதார அபாயங்களுக்கான உலக சுகாதார நிறுவனத்தின் பட்டியல் வெளியிடப்பட்டிருக்கின்றது. அவையாவன
    - காற்று மாசு மற்றும் பருவநிலை மாறுபாடு
    - தொற்றிக் கொள்ளும் வகையல்லாத நோய்கள்
    - உலகளாவிய அளவில் தொற்றிக் கொள்ளும் குளிர் காய்ச்சல்
    - பலவீனமான மற்றும் பாதிப்பிற்குள்ளாகும் அமைப்புகள்
    - நுண்ணுயிர் எதிர்ப்பு
    - எபோலோ மற்றும் உயர் அபாயமுடைய நுண்ணுயிரிகள்
    - மோசமான ஆரம்ப சுகாதார மையம்
    - தடுப்பூசிக் குழப்பங்கள்
    - டெங்கு
    - HIV / ஹெச்ஐவி

# விளையாட்டுச் செய்திகள்

## 2019 ஆஸ்ரேலியன் ஓபன் - பெடரர்

- ஆஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் ஜனவரி 14-ம் தேதியன்று ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி துவங்கியிருக்கின்றது.
- நடப்புச் சாம்பியனான ரோஜர் பெடரர், ஸ்டெபனாஸ் சிட்சிபாஸ் என்பவரிடம் தோல்வியுற்று 2019 ஆம் ஆண்டின் ஆஸ்திரேலிய ஓபன் போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்றார்.
- இம்முறையில் சிட்சிபாஸ் வரலாற்றில் ஒரு கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டியின் காலிறுதிக்குள் நுழைந்த முதல் கிரீஸ் வீரராகியுள்ளார்.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச கல்விக்கான தினம் – ஜனவரி 24

- உலகம் முழுவதிலும் ஜனவரி 24-ம் தேதி சர்வதேச கல்விக்கான தினமாக அனுசரிக்கப்படுகின்றது.
- 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 03-ம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது அமைதி மற்றும் வளர்ச்சிக்காக கல்வியின் பங்களிப்பை மதிப்புக் கூட்டும் வகையில் ஜனவரி 24-ம் தேதியை சர்வதேச கல்விக்கான தினமாக அனுசரிக்க முடிவெடுத்தது.

- கல்விக்கான உரிமை சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் விதி 26-ல் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

- - - - - - - - - - - - - - -